**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**
**TIRUVANNAMALAI.**
**SESSIONS CASE NO. 161/2019**
**Deposition of Witness for : PW.3**

**Name** : திரு. வாசுதேவன்
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 01-11-2021.**

முதல் விசாரணை -

நான் தற்போது பொரிக்கல் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். என் தகப்பனார் பெயர் கோதண்டம். ஆஜர் எதிரிகளை தெரியும். சுமார் 4 - 5 ஆண்டுகளுக்கு முன்னர் காலை 9 மணியளவில் என் கொல்லையில் நான் வேலை பார்த்துக் கொண்டிருந்த போது சத்தம் அதிகமாக கேட்டது. நான் போய் பார்த்த போது அ.சா.1க்கும் எதிரி வகையறாவுக்கும் நிலம் சம்மந்தமாகவும், பொது கிணற்றில் தண்ணீர் இறைப்பது சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. அப்போது பொது இடத்தில் உள்ள மரங்களை எதிரிகள் ஆட்களை வைத்து மரங்களை வெட்டினார்கள். அப்போது சுப்பிரமணி, அ.சா.1, அ.சா.2 மரம் வெட்டும் இடத்திற்கு வந்தனர். பிரச்சனை உள்ள இடத்தில் ஏன் மரங்களை வெட்டுகிறீர்கள் என்று கேட்டனர். சத்தியமூர்த்தி கோலால் ராஜாம்பாள் தலையில் அடித்தார். ராஜாம்பாள் தரையில் வீழ்ந்து விட்டார். அவருக்கு தண்ணீர் கொடுத்து மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். நான் வருவதற்சகு முன்பே சத்தியராஜிக்கு காயம் ஏற்பட்டு இருந்தது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -

எனக்கு 3 எக்கர் நிலம் உள்ளது. என் நிலத்திற்கும், எதிரி நிலத்திற்கும் இடையே ஒரு பர்லாங் தூரம் உள்ளது. ராஜாம்பாள் நிலமும், எதிரிகளின் நிலத்திற்கும் இடையே ஒரே வரப்பு அமைந்துள்ளது. நான் கண்ணாடி போட்டேன். கண்ணாடி போட்டும் பார்வை மங்கலாக உள்ளது. எனக்கு சத்தமாக பேசினால் தான் காது கேட்கும். எதிரிகளுக்கும்,

அ.சா.1க்கும் இடையே நான் பஞ்சாயத்து பன்னவில்லை. அவர்களுக்கிடையே என்ன சம்மந்தமான பிரச்சனை என்று எனக்கு தெரியாது. ராஜாம்பாளுக்கு அடி படுவதற்கு முன்பே நான் வந்து விட்டேன். எனக்கு காது கேட்காது என்றும், கண்ணும் சரியாக பார்க்க முடியாது என்றும், போலீசார் சொல்லிக்கொடுத்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ராஜாம்பாள் என் அத்தை மகள். ராஜாம்பாள் குடும்பத்திற்கும் எங்கள் ஊரில் உள்ள வேறு சில குடும்பத்திற்கும் நிலம் சம்மந்தமாக பிரச்சனை உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ராஜாம்பாளுடன் தகராறு கொண்ட வேறு நபர்கள் ராஜாம்பாளை தாக்கினார்கள் என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே பிரச்சனை கொண்ட எதிரிகள் மீது ராஜாம்பாளை அவர்கள் தான் தாக்கினார்கள் என்று ஒரு பொய் புகார் பெறப்பட்டு நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காலை 9 மணியளவில் என் கொல்லையில் வேலை செய்துகொண்டிருக்கும் போது சத்தம் அதிகமாக கேட்டது என்ற விவரத்தை போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. போலீசாரும் என்னை விசாரிக்கவில்லை. எத்தனை ஆட்களை வைத்து எதிரிகள் மரத்தை வெட்டினார்கள் என்று எனக்கு தெரியாது. அவர்கள் உள்ளூர் ஆட்களா அல்லது வெளியூர் ஆட்களா என்று எனக்கு தெரியாது. அந்த ஆட்களை நான் பார்க்கவில்லை. சத்தியமூர்த்தி கோலால் ராஜாம்பாள் தலையில் அடித்தார் என்று போலீசார் விசாரணையில் நான் சொல்லவில்லை. ராஜாம்பாள் தரையில் விழுந்து விட்டார் என்ற விவரத்தை நான் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை. அப்போது ராஜம்பாளுக்கு ரத்தக் காயம் ஏற்படவில்லை. புல்லட்டில் அவருடைய பெரிய பேரன் ஓட்ட ராஜாம்பாள் உட்கார்ந்து கொண்டு மருத்துவமனைக்கு சென்றார். நான் வருவதற்கு முன்பே சத்தியராஜீக்கு காயம் ஏற்பட்டுள்ள விவரத்தை நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை. சத்தியராஜுக்கும் ரத்தக் காயம் இல்லை. அவர் நின்று கொண்டிருந்தார். தனக்கு அடிப்பட்டுவிட்டதாக சத்தியராஜ் என்னிடம் சொல்லவில்லை. நானும் அவரிடம் பேசவில்லை. சத்தியராஜுக்கு எப்படி அடிப்பட்டு என்று தெரிந்து கொண்டேன் என்றால் ஊரில் எல்லோரும் பேசிக் கொண்டார்கள். ராஜாம்பாள் நெருங்கிய உறவினர் என்பதால் போலீசார் கேட்டுக்கொண்டதற்க இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/- வாசுதேவன்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 161/2019**

**Deposition of Witness for : PW.4**

**Name** : திரு. குப்பன்.
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 01-11-2021.**

**முதல் விசாரணை** -

நான் தற்போது பொரிக்கல் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும், எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள். அ.சா.1, 2 ஐ தெரியும். சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்னர் காலை 8 மணிக்கு நான் நாத்து வாங்குவதற்காக செங்கான் கொல்லைக்கு சென்றிருந்தேன். அப்போது சத்தம் கேட்டது நான் போய் பார்த்தேன். அப்போது எதிரிகள் மரத்தை வெட்டிக் கொண்டு இருந்தார்கள். அ.சா.1 இது சம்மந்தமாக கேட்டார். எதிரிகள் மூவருடன் ராஜசேகரும் இருந்தார். அவர் ராஜாம்பாளை வேப்பந்தடியால் தலையில் அடித்துவிட்டார். அவருக்கு தண்ணீர் கொடுத்து பிறகு திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்தோம். அ.சா.2ஐயும் எதிரிகள் அடித்து விட்டார்கள். மறுநாள் ராஜாம்பாள் இறந்து விட்டார் என்று கேள்வி பட்டேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** -

ராஜாம்பாள் எனக்கு உறவு இல்லை. எங்கள் சமூகமும் இல்லை. ராஜாம்பாள் என் வீட்டில் இருந்து 4வது வீட்டில் இருக்கிறார். என் வீட்டில் இருந்து 6வது வீடு எதிரிகள் வீடு. என்னுடைய நிலத்திற்கும், எதிரிகளின் நிலத்திற்கும் இடையே 1 1/2 பர்லாங் தூரம் உள்ளது. எதிரிகள் மற்றும் ராஜாம்பாள் நிலம் ஒரே சதுரமாக அமைந்துள்ளது. போலீசார் என்னை எங்கள் ஊரில் வைத்து விசாரித்தார்கள். சம்பவம் நடைபெற்ற 4 நாட்கள் கழித்து போலீசார் வந்தார்கள். ராஜாம்பாள் இறந்தது சம்மந்தமாக ஒரே ஒரு கையெழுத்து தான் போட்டேன். மருத்துவமனையிலும் பிரேத விசாரணை அறிக்கையின் போது ஒரு சாட்சி கையெழுத்து

போட்டேன். போலீஸ் விசாரணையின் போது சுமார் 5 ஆண்டுகளுக்கு முன் நாத்து வாங்க செங்கான் கொல்லைக்கு காலை 8 மணிக்கு சென்றதாக சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. அப்போது சத்தம் கேட்டது நான் போய் பார்த்தேன், எதிரிகள் மரத்தை வெட்டிக்கொண்டிருந்தார்கள் என்று போலீஸ் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 இது சம்மந்தமாக கேட்டார் என்றும், எதிரிகள் மூவரும் மற்றும் ராஜசேகர் இருந்தார் என்றும், அவர் ராஜாம்பாளை வேப்பந்தடியால் தலையில் அடித்து விட்டார் என்றும் நான் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. ராஜாம்பாளுக்கு தண்ணீர் கொடுத்து பின்னர் திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்தோம் என்று நான் போலீஸ் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 ஐயும் எதிரிகள் அடித்து விட்டார்கள் என்ற விவரத்தையும் நான் போலீஸ் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அரசு மருத்துவமனைக்கு நான் உடன் செல்லவில்லை. ஆனால் போஸ்ட் மார்டம் பண்ணவுடன் தான் நான் மருத்துவமனைக்கு சென்றேன். ராஜாம்பாளுக்கு தலையில் இருந்து ரத்தம் கொட்டிக்கொண்டு இருந்தது. சேலை மற்றும் ஜாக்கெட் எல்லாம் ரத்தமாக இருந்தது. ராஜாம்பாளின் பேரன் தான் ராஜாம்பாளை இரு சக்கர வாகனத்தில் கூட்டி சென்றார். ராஜாம்பாளுக்கு 3 பேரன்கள் உள்ளனர். எதிரிகளிடம் பால் மாடு விலைக்கு கேட்டேன். அவர்கள் தரமறுத்ததால் காழ்ப்புணர்ச்சி கொண்டு பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ராஜாம்பாள் குடும்பம் எனக்கு நெருக்கம் என்பதால் ராஜாம்பாள் குடும்பம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க எதிரிகளுக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் என் முதல் விசாரணையில் சொல்லியது போது எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை என்றும், அ.சா.1 குடும்பம் எனக்கு வேண்டப்பட்டவர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஓம்/- குப்பன்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 161/2019**

**Deposition of Witness for : PW.5**

**Name** : திரு. சின்னதம்பி.

**Father Name** :

**Village** :

**Taluk** :

**Caste** :

**Calling** :

**Religion** :

**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 01-11-2021.**

**முதல் விசாரணை** -

நான் தற்போது பொரிக்கல் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். எதிரிகளை தெரியும், அ.சா.1, 2 ஐ தெரியும். சுமார் 4 - 5 வருடங்களுக்கு முன்னர் காலை 8 மணியளவில் நான் எங்கள் ஊர் பிள்ளையார் கோயிலில் அமர்ந்திருந்தேன். நிலம் சம்மந்தமாக எதிரிகளுக்கும், அ.சா.1க்கு பிரச்சனை இருந்து வந்தது. அ.சா.1ன் மனைவி என்னிடம் வந்து அ.சா.1ன் கொல்லையில் பிரச்சனை நடந்து வருகிறது என்று கூறினார். நான் சென்று பார்த்த போது ராஜம்பாள் மயக்கமாக இருந்தார். நான் அவரிடம் கேட்ட போது ஆஜர் எதிரிகள் தாக்கியதாக கூறினார். பிறகு ராஜாம்பாளை திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தார்கள். மறுநாள் ராஜாம்பாள் இறந்து விட்டதாக கேள்வி பட்டேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** -

சாட்சி குப்பன் எனக்கு உறவுக்காரர் இல்லை. எதிரிகளுக்கும், ராஜாம்பாள் குடும்பத்திற்கும் அ.சா.4 உறவுக்காரர் என்றால் சரியல்ல. என் வீடு பிள்ளையார் கோயில் தெருவில் உள்ளது. எதிரிகள் வீட்டிற்கு எதிர் வீடு என் வீடு. எனக்கு 5 ஆண்டுகளுக்கு முன்னர் கூட சொந்தமான இடம் இல்லை. ஊரில் நான் பஞ்சாயத்து செய்வதில்லை. நான் உட்கார்ந்து இருக்கும் பிள்ளையார் கோயிலில் இருந்து எதிரிகளுடைய நிலத்திற்கு இடையே 2 பர்லாங் தூரம் இருக்கும். எனக்கு சொந்தமான வண்டி கிடையாது. நடந்து தான் செல்லவேண்டும். அன்றைய தினம் நான் நடந்து சென்றேன். எனக்கு தற்போது 73 வயதாகிறது. எனக்கு டாக்டர் கண்ணாடி போடவேண்டும் என்று சொல்லியுள்ளார். கண்

பார்வை எனக்கு சரியாக தெரியவில்லை. எதிரிகளுக்கும், அ.சா.1 குடும்பத்திற்கும் நிலம் சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது எனக்கு தெரியும். என்னை சம்பவத்தன்றே கொல்லைக்கு அழைத்து சென்று போலீசார் விசாரணை செய்தார்கள். சுமார் 4 - 5 வருடங்களுக்கு முன்னர் காலை 8 மணியளவில் நான் எங்கள் ஊர் பிள்ளையார் கோயிலில் அமர்ந்திருந்தேன் என்று நான் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1ன் மனைவி என்னிடம் வந்து அ.சா.1ன் கொல்லையில் பிரச்சனை நடந்து வருகிறது என்று கூறினார் என்ற விவரத்தை போலீஸ் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1ன் மனைவி பெயர் சித்ரா. சித்ரா தான் என்னிடம் தகவல் சொன்னார். நான் சென்று பார்த்த போது ராஜம்பாள் மயக்கமாக இருந்தார் என்ற விவரத்தை போலீஸ் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. ராஜாம்பாளிடம் கேட்ட போது ஆஜர் எதிரிகள் தாக்கியதாக கூறினார் என்று முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரத்தை போலீஸ் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது எல்லாம் பொய் என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ளது போது எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுடன் எனக்கு பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரிதான். ராஜாம்பாளுக்கும் வேறு சில நபர்களுக்கும் வேறு சில பிரச்சனைகள் சம்மந்தமாக விரோதம் உண்டு என்றால் ராஜாம்பாள் குடும்பத்தை கேட்டால் தான் தெரியும். எதிரிகள் மீது உள்ள காழ்ப்புணர்ச்சி காரணமாக அவர்களுக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/- சின்னதம்பி

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.